# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
# மாவட்ட செயலகம் - மட்டக்களப்பு
# விலைமனுக் கோரல்

01. மாவட்ட செயலகம், திராய்மடு மட்டக்களப்பு சார்பாக, மாவட்டப் பெறுகைக் குழுவின் (DPC) தலைவர், கீழே உள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள கட்டிட வேலைகளுக்காக தகுதியுள்ள மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து தற்போது முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.

02. மேற்படி விலைமனுக் கோரலானது தேசிய போட்டி விலை கேள்வி (NCB) நடைமுறையின் கீழ் நடத்தப்படும்.

03. ஒப்பந்தத்தை வெற்றிகரமாகப் பெறுவதற்குத் தகுதிபெற, விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் (blacklisted) இடம்பெற்றிருக்கக் கூடாது என்பதுடன், கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள CIDA பதிவு மற்றும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலும், ஒப்பந்தப் பெறுமதி ரூ. 5.0 மில்லியனை விட அதிகமாகக் காணப்படும் சந்தர்ப்பத்தில், 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் (Public Contracts Act No. 03 of 1987) கீழ் விலைமனுதாரர்கள் இலங்கை நிறுவனப் பதிவாளர் திணைக்களத்தில் தங்களைப் பதிவு செய்திருக்க வேண்டும். இதற்கான PCA-03 சான்றிதழ் அல்லது அதற்குரிய ஆதாரங்கள் விலைமனு ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

04. தகுதித் தேவைகள் தொடர்பான விபரங்கள் பெறுகை ஆவணங்களின் பிரிவு 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விபரங்கள் பெறுகை ஆவணங்களின் பிரிவு 5 இல் வழங்கப்பட்டுள்ளன.

05. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், திராய்மடு, மட்டக்களப்பு அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியும். (தொலைபேசி இல: 0652222233, பெக்ஸ்: 0652224466). அத்துடன், வேலை நாட்களில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் பெறுகை ஆவணங்களைப் பார்வையிடவும் முடியும்.

06. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூல கோரிக்கையைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலான முழுமையான பெறுகை ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும். இவ்ஆவணங்களை 09.10.2026 முதல் 26.10.2026 வரை, ஏதேனும் ஒரு வேலைநாளில் முற்பகல் 09.00 மணி முதல் பிற்பகல் 03.00 மணி வரை, கீழே உள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மீளப்பெற முடியாத கட்டணத்தைச் (non-refundable fee) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கொடுப்பனவு ரொக்கப் பணமாக (Cash) மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

07. விலைமனுவானது தலைவர், மாவட்ட பெறுகைக் குழு, மாவட்ட செயலகம், திராய்மடு, மட்டக்களப்பிற்கு முகவரியிடப்பட்டு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது திராய்மடுவில் உள்ள மாவட்டச் செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப்பெட்டியில் (Tender Box) 27.10.2026 அன்று பிற்பகல் 03.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாகவோ இடப்படுவதன் மூலமாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனு சமர்ப்பிப்பு முடிவடைந்த பின்னர் கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில், விலைமனுதாரர்கள் அல்லது நேரில் வருகை தர விரும்பும் அவர்களது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. அனைத்து விலைமனுக்களும் கீழே உள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின்படி, வங்கி உத்தரவாதம் (Bank Guarantee), கட்டுமான உத்தரவாத நிதி (Construction Guarantee Fund) அல்லது மீளப் பெறத்தக்க ரொக்க வைப்பு (Refundable Cash Deposit) வடிவிலான பொருத்தமான விலைமனுப் பிணையுடன் (Bid Security) சமர்ப்பிக்கப்பட வேண்டும். ரொக்க வைப்புச் செய்யும் பட்சத்தில், விலைமனுதாரர் அந்தப் பணத்தை மாவட்டச் செயலகம், திராய்மடு, மட்டக்களப்பில் வைப்புச் செய்ய வேண்டும் என்பதுடன், அதன் மூலப்பிரதி (Original) விலைமனு ஆவணங்களுடன் இணைத்துச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

09. விலைமனுக்கள் மூலப்பிரதி (Original) மற்றும் பிரதி (Copy) என இரண்டு பிரதிகளாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மூலப்பிரதி மற்றும் பிரதி ஆகிய இரண்டும் தனித்தனி முத்திரையிடப்பட்ட உறைக்குள் இடப்பட்டு, அவற்றின் மேல் முறையே "மூலப்பிரதி" (Original) மற்றும் "பிரதி" (Copy) எனக் குறிக்கப்பட வேண்டும். இந்த இரண்டு உறைகளும் மற்றுமொரு தனி முத்திரையிடப்பட்ட உறைக்குள் இடப்பட வேண்டும். அந்த வெளி உறையின் மேல் இடதுபுற மூலையில் வேலையின் விபரம் (Description of work) மற்றும் ஏல இலக்கம் (Bid Number) தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

10. விலைமனுக்கள் 26.01.2027 ஆம் திகதி வரை செல்லுபடியாகும் நிலையில் இருத்தல் வேண்டும்.

11. விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னரான அறிவுறுத்தல் கூட்டம் (Pre-bid meeting), 19.10.2026 அன்று பிற்பகல் 02.30 மணிக்கு மாவட்ட செயலகம், திராய்மடு, மட்டக்களப்பில் நடைபெறும்.

12. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்தவொரு நேரத்திலும், இந்த பெறுகை நடவடிக்கையை ரத்துச் செய்வதற்கு அல்லது மீளப் பெறுவதற்கு தொழில் வழங்குனருக்கு (Employer) முழுமையான அதிகாரம் உண்டு.

| வேலையின் விபரம் மற்றும் விலைமனு இலக்கம் | நேரடி கட்டுமானச் செலவு (ரூபா மில்லியனில்) (வரிகள் நீங்கலாக) | 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத் தேவை | ஒப்பந்தக் காலம் | CIDA பதிவு மற்றும் விசேடத்துவம் | விலைமனுப் பிணைத் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் | திரும்பப் பெற முடியாத கட்டணம் (ரூபா) | நிதி மூலம் |
|---|---|---|---|---|---|---|---|
| மட்டக்களப்பு கும்புறுமூலை பகல் நேர பராமரிப்பு நிலையக் கட்டமான வேலை விலைமனு இலக்கம்: PMU/KMDCC/DO01/2026 | 28.9 | ஆம் | 180 நாட்கள் | C6, C5 & C4 (கட்டிடங்கள் - Buildings) | ரூ.290,000.00 23.02.2027 | 7,500.00 | இலங்கை அரசாங்கம் (GOSL) |

**திரு.J.S. அருள்ராஜ்,**
தலைவர், மாவட்ட பெறுகைக் குழு,
மாவட்ட செயலாளர்,
மாவட்ட செயலகம், திராய்மடு,
மட்டக்களப்பு.
09.10.2026